சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. C.ராஜேஷ், B.A., B.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.158/2022</u>

24.07.2026

பி.வா.சா.1 திரு. உலகநாதன்

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். எனது அப்பா பெயர் ராஜமாணிக்கம். எனது தகப்பனாருக்கு நிறைய சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். எனது தகப்பனாரின் சொத்துக்களை பொறுத்து அவர் என்ன பாராதீனம் செய்வதற்கும் அவருக்கு பரிபூரண உரிமையுண்டு என்றால் சரிதான்.

2. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து உயில் எழுதுவதற்கு அவருக்கு உரிமையுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு உயில் எழுதியிருந்தால் அதை ஆட்சேபணை செய்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரிதான். வாதி 05.03.2006 ல் எனது தகப்பனார் உயில் எழுதியுள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அவர் உயில் எழுதவில்லை. அந்த உயிலை நான் பார்க்கவில்லை. நான் எதிர்கட்சி செய்துள்ள விவரம் அனைத்தும் உயிலில் பார்க்காமல் செய்துள்ளேன் என்றால் அசல் உயிலை பார்க்கவில்லை, நகல் உயிலை பார்த்துள்ளேன்.

3. மேற்படி உயில்படி கதிரேசனுக்கும், ராதாகிருஷ்ணனுக்கும் சொத்து கிடைத்தது என்றால் அவ்வாறு கிடைக்காது. ராஜமாணிக்கம் இறந்த பிறகு வா.சா.ஆ.9 உயிலின் படி சொத்துக்கள் கதிரேசனுக்கும், ராதாகிருஷ்ணனுக்கும் கிடைத்தது என்றால் சரியல்ல. எங்களுக்கிடையே 1994 ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். அதில் நான் 7 வது நபராக கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தை பற்றி இவ்வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை.

4. மேற்படி ஒப்பந்தம் பாகபிரிவினை ஒப்பந்தம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் சர்வே எண்.84/6 மனை கதிரேசன், ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. அதில் ராதாகிருஷ்ணன் மற்றும் கதிரேசனுக்கு சரிபாதி என காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எதிர்வழக்குரை மற்றும் அ.வ.எண்.134/2024, 20/2024 ல் சொல்லவில்லை என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் மற்றும் தாயார் வழி சொத்துக்களை குடவாசல் நிலவள வங்கியில் அடமானம் வைத்து எனக்கு ரத்த பரிசோதனை நிலையம் மற்றும் ஜெராக்ஸ் கடை வைத்து கொடுத்தார்கள் என்றால் என் தகப்பனார் இருக்கும் போது வைத்து கொடுத்தார்.

5. மேற்படி ரத்த பரிசோதனை நிலையம் மற்றும் ஜெராக்ஸ் கடை ஆகியவை தற்போது இல்லை. 2006 ஆம் வருடம் மின் தட்டுபாடு அதிகமாக இருந்ததால் தொடர்ந்து நடத்தமுடியவில்லை. ரத்த பரிசோதனை நிலையம் மற்றும் ஜெராக்ஸ் கடை ஆகியவை வாடகை கட்டிடத்தில் நடத்தப்பட்டது.

சர்வே எண்.84/6 ல் கதிரேசன் 1994 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே கதிரேசன் கடை நடத்திவந்தார் என்றால் எனது அப்பாவுடன் சேர்ந்து நடத்திவந்தார்.

6. தாவா சொத்திற்கு 19.11.2025 வரை யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் கதிரேசன் பெயரில் இருந்தது. இந்த வழக்கு 2022 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையிலிருக்கும் போது ராஜமாணிக்கம் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் பட்டா மாற்றம் செய்யப்பட்ட பிறகு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். பி.வா.சா.ஆ.10 ல் எப்போது பட்டா மாற்றம் ஏற்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10 ல் 22.04.2025 ல் வருவாய் கோட்டாட்சியர் கையெழுத்து செய்ததாக உள்ளது என்றால் சரிதான்.

7. வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோருக்கும் எதிராக தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அரசு தரப்பினர் தோன்றாத்தரப்பினராக உள்ளனர் என்றால் சரிதான். கதிரேசனும், ராதாகிருஷ்ணனும் வடபாகம் மற்றும் தென்பாகம் என பிரித்து கொண்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதில் வாதிக்கு அவரது தகப்பனார் 0.02.0 ஏர்ஸ்-க்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான்.

8. வாதி செட்டில்மெண்ட் அடிப்படையில் அந்த இடத்தில் ஷெட் போட்டுள்ளார் என்றால் சரிதான். பட்டாவை மாற்றுவதற்கு நான் மனு கொடுத்தேன் என்றால் ரத்து செய்வதற்கு மனு கொடுத்தேன். குடும்ப சொத்து என்றும் அது தனிபட்ட சொத்து அல்ல என்றும் சொல்லிதான் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியரிடம் கதிரேசன் வகையறா எடுத்துரைத்த வாதத்தை கருத்தில் கொள்ளவில்லை என்றால் சரிதான். அதனால் பெயர் மாற்றத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

9. வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவை எதிர்த்து கதிரேசன் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்தார் என்றால் சரிதான். மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேல்முறையீட்டில் உயிலை பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் உயில் செல்லாது என சொல்லப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவில் உயில் பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை.

10. வருவாய்துறையினர் சரியான முறையில் தீர்வு செய்யவில்லை என வாதி கட்சி செய்துள்ளார் என்றால் சரிதான். பட்டா என்பது உரிமை மூல ஆவணம் அல்ல என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.எண்.20/2024 மற்றும் 134/2024 ல் தாவா சொத்து காட்டப்பட்டுள்ளதா என்றால் அ.வ.எண்.134/2024 ல் காட்டப்படவில்லை. அந்த சொத்தை சேர்ப்பதற்காக என்னால் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. பட்டா மாற்றத்தின் அடிப்படையில்தான் அந்த மனு போடப்பட்டது என்றால் சரிதான்.

11. பட்டாவை தவிர்த்து பதிவு ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்று சொல்லி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் ராதாகிருஷ்ணன் கொடுத்த வாக்குமூலம் இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனது தூண்டுதலின் பேரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்கு

ராஜமாணிக்கத்தின் உயில் அடிப்படையிலும், கதிரேசனின் செட்டில்மெண்ட் அடிப்படையிலும் உரிமைமூலம் ஏற்பட்டு சொத்து கிடைத்துள்ள நிலையில் அதை ஆட்சேபிக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

12. தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனார் எழுதிவைத்ததாக சொல்லும் உயில் மோசடியானது என்று சொல்வதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் ஆதாரம் இல்லை. உயிலை பற்றி தெரிந்து கொண்டே தாவா சொத்தை வாதி அனுபவம் செய்துவருவதை கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உண்மைக்கு மாறாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது செல்வாக்கினால் பட்டா மாற்றம் ஏற்பட்டதால் அரசு தரப்பில் யாரும் சாட்சியமளிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2026.07.24 17:22:23 +0530

Subordinate Judge,
Tiruvarur.